## ‘வாட்ஸ் அப்’பில் வலம் வருகிறது!




# ஈரானில் சிக்கித் தவிக்கும் 700 தமிழக மீனவர்களை உடனடியாக மீட்க நடவடிக்கை மேற்கொள்வீர்!

## வைகோ அறிக்கை!

சென்னை, மார்ச். 23–

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

குமரி மாவட்டம் கடியப்பட்டணம், குளச்சல், இணையம் மற்றும் முட்டம் உட்பட பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 60 மீனவர்கள் ஈரானில் பணியாற்றி வருகின்றனர்.

மேலும் தூத்துக்குடி, நெல்லை, ராமநாதபுரம், கடலூர் மாவட்டங்களைச் சேர்ந்த 600க்கும் மேற்பட்டோர் ஈரானில் பணிபுரிகின்றனர். இவர்கள் அனைவரும் அச்சத்தில் உள்ளனர்.

குமரி மாவட்டம் கடியப்பட்டணத்தைச் சேர்ந்த பாபின் செசாரியோ, சத்ய ரமான் ராஜ் ஆகியோர் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில் ”சகோதரர்கள் அஸ்வின் ரஞ்சித் குமார், சகாய ஜெனிஷ்ராஜ் ஆகியோர் ஈரான் மீன்பிடி நிறுவனத்துக்கு கடந்த ஆண்டு செப்டம்பரில் பணிக்குச் சென்றனர்.



தற்போது அமெரிக்கா, இஸ்ரேல் நாடுகள் ஈரான் நாட்டின் மீது போர் தொடுத்துள்ளதால் ஈரானில் எங்கள் சகோதரர்கள் பாதுகாப்பற்ற சூழலில் தவிக்கின்றனர். குண்டு மழை பொழிவதாகவும், உணவுகூட கிடைக்காமல் தவிப்பதாகவும் தெரிவித்தனர்.

ஈரான் நாட்டில் தவிக்கும் தமிழக மீனவர்களை பாதுகாப்பாக அழைத்துவர உத்தரவிட வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தனர்.

இந்த மனு மார்ச் 11ஆம் தேதி நீதியரசர் பரத சக்கரவர்த்தி முன்பு விசாரணைக்கு வந்த போது, அரசுத் தரப்பில், ஈரானில் உள்ள இந்தியர்களை மீட்க இந்திய தூதரகம் நடவடிக்கை எடுத்து வருகிறது. தூதரகத்தை தொடர்பு கொள்வதற்காக தொலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்தியர்களை மீட்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கூறப்பட்டது.


ஆனால் இதுவரையில் ஒன்றிய அரசு அவர்களை மீட்க உரிய நடவடிக்கை எடுக்கவில்லை.

ஈரான் அமெரிக்க மற்றும் இஸ்ரேல் இடையிலான உக்கிரமான போர் பகுதியில் சிக்கித் தவிக்கும் 700க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் மீன்பிடி விசைப்படகுகளில் கடந்த மூன்று வார காலமாக முடங்கியுள்ளனர்.

இது தொடர்பாக மீனவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதள காணொளியில், எந்த நேரத்தில் உயிர் பறி போகுமோ என்று குண்டு வீச்சுக்கு இடையில், உணவு தண்ணீர் இன்றி விசைப்படகுகளில் தங்கி உள்ளோம் என்று அச்சத்துடன் குறிப்பிட்டுள்ளனர்.

எனவே ஒன்றிய அரசு தமிழ்நாடு மீனவர்களை மீட்பதற்கு சிறப்பு விமானங்கள் அல்லது கப்பல்கள் மூலம் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு வைகோ அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.



உறக்கம் உன் விழிகளை
தழுவத் துடிக்கலாம் !
வெற்றிக்குப் பின் வருக
என்று அதற்கு
விடை கொடுத்து
அனுப்பி விடு.

.....கலைஞர்...



# தி.மு.க. இளைஞர் அணி

## மாவட்ட - மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின் பேரில், 2026 சட்டமன்றத் தேர்தல் பிரச்சாரத்திற்கு முன்கள வீரர்களாக இளைஞர் அணியினர் செயலாற்றும் வகையில், மாவட்ட – மாநகர – ஒன்றிய – நகர – பகுதி – பேரூர் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் கலந்துகொள்ளும் ஆலோசனைக் கூட்டங்களை நடத்தவுள்ளோம். மார்ச் 23, 24, மற்றும் 25 ஆகிய தேதிகளில் மேற்கு மற்றும் தெற்கு மண்டலங்களில் நடைபெற உள்ள இந்தக்கூட்டங்களில் சம்மந்தப்பட்ட மாவட்ட – மாநகர – ஒன்றிய – நகர – பகுதி – பேரூர் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஆலோசனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு:–

**23.3.2026 திங்கள்கிழமை**

| நேரம் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| காலை 11.00 மணி | கோவை, நீலகிரி மாவட்ட – ஒன்றிய – நகர – பகுதி – பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் | எம்.என்.சி.ஆர். கிராண்ட் பேலஸ், முதலிபாளையம், அவிநாசி சாலை, கோவை. |
| மாலை 3.00 மணி | ஈரோடு, நாமக்கல் மாவட்ட – மாநகர – ஒன்றிய – நகர – பகுதி – பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் | தங்கம் மஹால், பெருந்துறை சாலை, மேட்டுக்கடை, ஈரோடு. |
| மாலை 6.00 மணி | கரூர், திருப்பூர் மாவட்ட – மாநகர – ஒன்றிய – நகர – பகுதி – பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் | பிரேம் மஹால், கரூர். |

**24.3.2026 செவ்வாய்க்கிழமை**

| நேரம் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| காலை 10.00 மணி | தேனி, திண்டுக்கல் மாவட்ட – மாநகர – ஒன்றிய – நகர – பகுதி – பேரூர் அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் | பி.எஸ்.என்.ஏ.மஹால், ரவுண்ட் ரோடு, திண்டுக்கல். |
| மாலை 3.00 மணி | மதுரை, விருதுநகர் மாவட்ட – மாநகர – ஒன்றிய – நகர – பகுதி – பேரூர் அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் | ஐடா ஸ்கட்டர் அரங்கம், சிந்தாமணி, மதுரை. |
| மாலை 6.00 மணி | இராமநாதபுரம், சிவகங்கை மாவட்ட – ஒன்றிய – நகர – பேரூர் அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் | ராஹா பேலஸ், கீழகண்டனி, மானாமதுரை சாலை, சிவகங்கை. |

**25.3.2026 புதன்கிழமை**

| நேரம் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| காலை 10.00 மணி | திருநெல்வேலி – கன்னியாகுமரி மாவட்ட – மாநகர – ஒன்றிய – நகர – பகுதி – பேரூர் அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் | மூன் மஹால், என்.ஜி.ஓ. குடியிருப்பு, பாளையங்கோட்டை. |
| மாலை 3.00 மணி | தூத்துக்குடி – தென்காசி மாவட்ட – மாநகர – ஒன்றிய – நகர – பகுதி – பேரூர் அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் | ஸ்ரீ நவீரா பேலஸ், கோவில்பட்டி. |

**அன்பகம்**
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 21.3.2026

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி



சட்டப்பேரவைத் தேர்தலுக்கான கழகப் பிரச்சார பாடல் ஒலிப்பேழை, கழக கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவைச் செயலாளர் கலைமாமணி டாக்டர் இறையன்பன் குத்தூஸ் பாடி ஆசிப் இறையன்பன் இசை அமைப்பில் – கழக கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை துணைச் செயலாளர் எம்.எஸ்.ஹரிபாபு தயாரிப்பில் உருவாகியுள்ளது. அதனை கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார். கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, தலைமை நிலையச் செயலாளர் பூச்சி முருகன், கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை துணைத் தலைவர் நடிகர் போஸ் வெங்கட் ஆகியோர் அப்போது உடன் இருந்தனர்.

## புதுச்சேரி, அசாம், கேரளா சட்டமன்றத் தொகுதிகளுக்கு

# வாக்கு இயந்திரங்களை அனுப்பும் முதற்கட்ட ஒதுக்கீடு நிறைவு!

புதுச்சேரி, மார்ச்.23-

2-ம் கட்ட குலுக்கல் நடத்தப்பட்டு ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் எந்த இயந்திரம் செல்லும் என்பது தீர்மானிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரி, அசாம் மற்றும் கேரளா ஆகிய மாநிலங்களில் வரும் ஏப்ரல் 9-ந்தேதி நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலுக்கான ஆயத்தப் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன. இதன் ஒரு பகுதியாக மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும், விவிபாட் இயந்திரங்களின் முதற்கட்ட குலுக்கல் முறை ஒதுக்கீடு நிறைவு பெற்றுள்ளது.

இது தொடர்பாக இந்திய தலைமை தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், “கடந்த 15-ந்தேதி 5 மாநில தேர்தல் தேதிகள் அறிவிக்கப்பட்டன. அதன்படி வரும் ஏப்ரல் 9-ந்தேதி புதுச்சேரி, அசாம், கேரளாவில் சட்டமன்ற தேர்தலும், மேலும் 6 மாநிலங்களில்இடைத்தேர்தல்களும் நடைபெற உள்ளன.

தேர்தல் விதிமுறைகளின்படி வாக்குப்பதிவு இயந்திரங்கள் 2 கட்டங்களாக ஒதுக்கப்படுகின்றன. தற்போது மாவட்ட கிடங்குகளில் இருந்து சட்டமன்ற தொகுதிகளுக்கு வாக்கு இயந்திரங்களை அனுப்பும் முதற்கட்ட ஒதுக்கீடு நிறைவடைந்துள்ளது.

இந்த ஒதுக்கீடு அந்தந்த மாவட்ட தேர்தல் அதிகாரிகளால், அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் வெளிப்படையாக நடத்தப்பட்டது. குலுக்கல் முறையில் ஒதுக்கப்பட்ட இந்த இயந்திரங்களின் பட்டியல், அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

இந்த இயந்திரங்கள் தற்போது அந்தந்த சட்டமன்ற தொகுதிகளில் உள்ள பாதுகாப்பு அறைகளில் வைக்கப்படும். வேட்பு மனுக்கள் இறுதி செய்யப்பட்ட பிறகு 2-ம் கட்ட குலுக்கல் நடத்தப்பட்டு, ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் எந்த இயந்திரம் செல்லும் என்பது தீர்மானிக்கப்படும்.

அந்த வாக்கு இயந்திர பட்டியலும், போட்டியிடும் வேட்பாளர்களுடன் பகிர்ந்து கொள்ளப்படும். தேர்தல் நடைமுறையில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்ய இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நோ எண்ட்ரி




2014ல் ஒரே ஒரு தொகுதியாக
கன்னியாகுமரியில் மட்டுமே
வென்ற பா.ஜ.க.

2019 மற்றும்
2024 ஆகிய தேர்தல்களில்
ஒரு தொகுதியில் கூட
அக் கட்சி
வென்றதில்லை.

ஆக
நாட்டின் ராஜ்ஜியத்தை
ஆளுகிற கட்சிக்கு தமிழ்நாட்டில்
பூஜ்யம் தான் என்கிற
அவமானத்தால்
தலை குனிந்து நிற்கும்
தாமரைக் கட்சி
எடப்பாடியை பினாமியாக வைத்து
தமிழ் மண்ணையும்
தமிழக மக்களையும்
அடக்கி ஆளப் பார்க்கிறது.

இது தனக்கு வாடகைக்கு
தர மறுக்கும் கடையை
வேறு ஒருவரை வைத்து
தன்வசப்படுத்தி
நினைத்ததை
அடைய முயற்சிக்கும்
சூழ்ச்சியிலான
மூர்க்கத்தனமாகும்..

இதனை அறிவார்ந்த
தமிழ் மக்கள் முறியடித்து
பா.ஜ.க.வின் முகத்தில்
கரிபூசக் காத்திருக்கிறார்கள்..

ஆக தனியாக வந்தாலும்
அணியாக வந்தாலும்
தமிழ்நாட்டில் பா.ஜ.க.வுக்கு
அனுமதி இல்லை
என்பதே நிலை..

**என்னநாஞ் சொல்றது!**



**மருது அழகுராஜ்**
கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்